பற்றியோ தமிழ் நாட்டு வரலாறு பற்றியோ குறிப்பு எதுவும் இல்லை. அப்படிப்பட்ட குறிப்புகள் அதில் வர வேண்டுமென்று தமிழக அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவர்களுடைய கலைக் களஞ்சியத்தைப் பார்த்துத்தான் நாம் கலைக் களஞ்சியம் வெளியிடும் நிலைமையில் இருக்கிறோம். உலகைப் பொருத்த பல பொதுக் கருத்துக் களை, பொது அறிவு பயக்கும் கருத்துக்களைத் தொகுத்துக் கொடுக்கும் அளவிற்கு என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா விளங்குகிறது. அதி லிருந்து எடுத்துப் போட்டிருக்கிறோம். வேண்டுமென்றால், என்சைக்ளோ பீடியா சொசைடிக்கு திருவள்ளுவரைப் பற்றியும் தமிழ் நாட்டைப் பற்றியும் எழுதி, அவற்றைச் சேர்த்துக்கொள்ளச் சொல்லலாம். அந்த முயற்சியில் அரசுதான் ஈடுபடவேண்டுமென்பதில்லை. உறுப்பினர் போன்றவர்களும் ஈடுபடலாம்.

திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி : என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா வில் இருந்துதான் எடுத்துப் போடவேண்டுமென்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. அதில் வருகின்ற அபத்தங்களைப் பற்றி சில விஷயங்கள் உண்மைக்குப் புறம்பானவைகளாக இருப்பது பற்றி அனேகர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஒரு "The Myth of the Encyclopaedic Brittanica" என்ற புத்தகமே வந்திருக்கிறது. அதனால் இனிமேல் நம் கலைக் களஞ்சியத்திற்கு வேண்டிய விஷயங்களை வேறு மூலங்களிலிருந்து, ஆதாரங்களிலிருந்து சரிபார்த்து வெளியிட இந்த சர்க்கார் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவ்வாறு இல்லை. என்சைக்ளோபீடியாவைப் பார்த்தும் இங்கே இருக்கிற கருத்துக்களைத் திரட்டியும்தான் ஓரளவுக்குத் தருகிறார்கள். பல விஷயங்கள் அதைப் பார்த்துத்தான் எடுக்கவேண்டியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரலாறுகளை, அகநானூறு, புறநானூறு போன்ற வற்றிலிருந்து நாமேதான் திரட்டிச் சொல்லவேண்டியிருக்கிறது. அரசினர் வரலாறு, நாகரிகவரலாறு பற்றி தமிழகத்தைப் பொறுத்தவரையில், இங்கேயே அக்கருத்துகள் திரட்டப்படுகின்றன. மற்றபடி நம் நாட்டு மக்களுக்குப் பொது அறிவைக் கொடுப்பதற்கு எதையெதைத் தொகுக்கலாமோ அவற்றை எடுத்துத் தயாரித்திருக்கிறார்கள்.

Misappropriation by Family Planning Doctors in Madurai district.

*47. Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(a) whether it is a fact that a huge amount of Government funds was misappropriated by Family Planning Doctors in Madurai district ;

(b) whether the Directorate of Vigilance and Anti-Corruption has registered a case in this regard ; and

(c) if so, the action taken thereon ?

மதுரை மாவட்ட குடும்ப நலத்திட்ட மருத்துவர்களால் செய்யப்பட்ட கையாடல்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள குடும்ப நலத்திட்ட மருத்துவர்கள், அரசு நிதியைப் பெரிய அளவில் கையாடல் செய்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) கண்காணிப்பு-லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகம் இது குறித்து வழக்கு ஒன்று பதிவு செய்துள்ளதா ?

(உ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) மதுரை மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் அதிகாரிகள் மீது சில முறை கேடுகள் பற்றிய ஐயப்பாடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

(இ) ஆம்.

(உ) இப்பொருள் இன்னும் ஆய்வில் உள்ளது.

Thanjavur Medical College Hostel.

*48. Q.—THIRU G. SWAMINATHAN : Will the **Hon. the** Minister for Education and Health be pleased to state :—

(*a*) the arrears payable by the inmates of the Thanjavur Medical College Hostel as on 1st July 1969 ;

(*b*) the amount of arrears over three years ; and

(*c*) the action taken by the Government to realise the arrears ?

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்

(அ) 1—7—1969 அன்றைய நிலவரப்படி தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியில் இருக்கும் மாணவர்களினால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு ?

(இ) மூன்று ஆண்டுக் காலத்திற்கு மேற்பட்ட நிலுவைத் தொகை எவ்வளவு ?

(உ) நிலுவைத் தொகையை வசூல் செய்ய அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ரூ. 60,256·70.

(இ) ரூ. 11,913·14.

(உ) விடுதி பாக்கியுள்ள மாணவர்கள் விடுதியில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. மேற்படி விபரங்கள் அவர்களுடைய பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. அத்தகைய மாணவர் கடைசி ஆண்டு எம். பி. பி.எஸ். தேர்வு தேறிய பின்னர் பாக்கி செலுத்தவேண்டியிருந்தால் அந்தப் பணம் மாணவர்க்கு அளிக்கப்படும் அவுஸ் சர்ஜன் உதவி பணத்திலிருந்து வசூலிக்கப்படும் மேலும் அத்தகைய மாணவர் செலுத்தவேண்டிய பாக்கி தொகை முழுவதுமாக செலுத்தும் வரையில் அவரது அவுஸ் சர்ஜன் பயிற்சி முடிந்தபோதிலும் அதற்குரிய நற்சான்றிதழ் அளிக்கப்படமாட்டாது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, பல மாணவர்களிடமிருந்து பெரும் தொகை வசூலிக்கப்படாமல் இருக்கிறது என்பது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஒருவர் பணம் கொடுக்கவில்லை என்றால், அரசாங்கச் சட்டப்படி நான் கேள்விப்பட்ட வரையில், அந்தப் பணத்தை வாங்க முடியாது என்று சொல்கிறார்கள். மாணவர்கள் பணம் கொடுக்காமல் ஆறு மாதம் ஒரு வருஷம் இருந்து கொண்டே இருக்கிறார்கள். பணம் கொடுக்காத மாணவர்கள் இருப்பதால், பணம் கொடுக்கிற மாணவர்கள் தொகை குறைவாக இருப்பதால், அங்கே போடப்படுகிற உணவு மோசமான நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. அது அரசுக்குத் தெரியுமா ? எல்லோரிட